# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2014 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, யூன் மாதம் 20 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2014 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்டி.) 22/2010

**குமாரசிறி ஹெட்டிகே மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்**

"குமாரசிறி ஹெட்டிகே மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு தொடர்புபட்ட அதன் எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்கு மாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" என குறிப்பீடு செய்யப்படும்) "குமாரசிறி ஹெட்டிகே மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர் களாகவுள்ளவர்களும் அல்லது இத்தால் அமைத்துருவாக் கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பின்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "குமாரசிறி ஹெட்டிகே மன்றம்" குமாரசிறி ஹெட்டிகே மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்துக்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வது தொடர்பில் ஏற்புடையதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையின் அனைத்து சமுதாயத்தினரிடையேனும் சமாதானம், நல்லெண்ணம், புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவித்தல் ;

(ஆ) வசதிகுறைந்த பாடசாலைச் சிறுவர்களுக்கு அவர்களது கல்வியைத் தொடர்வதனை இயலச்செய்வதற்கு நன்கொடைகள், பரிசுகள், புலமைப்பரிசில்கள் என்ற வகையில் நிதியாகவோ வேறுவகையிலோ உதவி அளித்தலும், பாடசாலைகளில் அவர்களின் ஒழுங்கான வரவை ஊக்குவித்தலும் மற்றும் அவர்களின் கல்வி, ஆன்மீகம், கலாசார மற்றும் அறிவியல் அபிவிருத்தியில் அவர்களுக்கு உதவுதலும் ;

(இ) இலங்கையில் அனைத்து சமுதாயத்தினரிடையேயும் மனித உரிமைகள், மனித விழுமியங்கள், அடிப்படைச் சுதந்திரம் என்பனவற்றை மேம்படுத்துதலும் சனநாயக விழுமியங்களை மேம்படுத்துதலும் ;

(ஈ) பல்வேறு இனங்களுக்கிடையேயும் சமுதாயங்களுக் கிடையேயும் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றும் பேணி வளர்க்கும் நோக்குடன் அவர்கள் சமூக மற்றும் கலாசார செயற்பாடுகளில் பங்குபற்றுவதனை ஊக்குவித்தல் ;

(உ) இலங்கையின் அனைத்து சமுகத்தினரிடையேயும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக மனிதநேயம், விளையாட்டுத்துறை, இலக்கியம், ஆன்மீகச் செயற் பாடுகள் என்பனவற்றை மேம்படுத்துதலும் ஊக்கு வித்தலும் ;

(ஊ) அத்தகைய அதிகார சபையிகளின் சம்மதத்துடன் இயைபான அதிகார சபைகளுக்கு பின்வருவனவற்றைச் செய்வதில் உதவிசெய்தல் :-

(i) நூலகங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ii) புதிய தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தி கமத்தொழில் மற்றும் கடற்றொழில் செயற்பாடு களை ஊக்குவித்தல் ;

(iii) அறிவியல் கற்கைகளின் முன்னேற்றத்திற்காக தகவல் தொழினுட்ப நிலையங்களை தாபித்தல் ;

(iv) உயர்கல்வி நிறுவனங்களின் அபிவிருத்தியிலும் மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளை ஊக்கு வித்தலிலும் மற்றும் வசதிகுறைந்த மாணவர் களுக்கு உயர்கல்வியைத் தொடர்வதற்காகப் புலமைப்பரிசில்களை வழங்குவதிலும் ;

(v) பெண்களுக்கு, சிறுவர்களுக்கு, அங்கவீனமுற்ற ஆட்கள் போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு மற்றும் வறியோருக்கு அவர்களது ஆற்றல்களை எய்துவதற்கு தத்துவமளித்தல் ; அத்துடன்

(vi) கல்வி, சமய, கலாசார, அழகியற்கலை மற்றும் விளையாட்டுத் துறை வசதிகளின் அபிவிருத்தியும் மற்றும் பலதரப்பட்ட விழாக்களையும் போட்டி களையும் ஒழுங்கு செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படுவதான இச்சட்டத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் கூட்டுத்தாபனம், அத்தகைய நடைமுறைப்படுத்தலானது இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய ஏதுக்கள் ஒன்றின் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல்*

**4.** கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும், அத்துடன் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாட்டை உருவாக்காதிருக்கும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் என்பன இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பதவிதாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையோரைக் கொண்ட (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர்கள் சபையொன்றினால், நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் சபையானது 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான முறையில் முதலாவது சபையானது நியமிக்கப்படும் வரை அல்லது தெரிவுசெய்யப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் சபையாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டினுள் நியமிக்கப்படுதல் அல்லது தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்கள் மற்றும் மதியுரையாளர்கள் உட்பட சபையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டு காலப் பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்

கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்று ஆண்டுக் காலப்பகுதியின் முடிவின் பின்னர் மீள் நியமனத்துக்கு அல்லது மீளத் தெரிவுசெய்யப்படுவதற்கு தகைமையுடையவராததாலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் இறப்பு, பதவிதுறத்தல், இயலாமை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாகப் பதவி வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில் சபையானது கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தெரிவு செய்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) (ஆ) என்னும் பந்தியின் கீழ்த் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வருவன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறன அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் மற்றும் விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்குமான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படக் கூடியவாறான ஏதேனும் காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கெடுத்தல் அல்லது கொடுத்தல், நிர்மாணித்தல் அத்துடன் புனரமைத்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக் கூடியவாறு அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும் ;

(ஆ) பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப் பின்றியோ நிதிகளை கடன்பெறுதல் அல்லது திரட்டு தல் மற்றும் காசாகவோ அல்லது பொருளாகாகவோ மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடை களை பெற்றுக்கொள்ளுதல் :

ஆயின், சபையானது கூட்டுத்தாபனத்துக்குச் செய்யப் பட்ட எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு வளங்கள் திணைக் களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(இ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளு தலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை பணிப்பாளர் கள் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும் ;

(ஊ) அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிதல், தொழிலுக்கமர்த்தல், பதவிநீக்கம் செய்தல் அல்லது சேவைகளை முடிவுறுத்துதல் அத்துடன் அவர்கள் மீது

ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் அவர்களுக்கு கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைச் செலுத்துதலும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக் கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணை தலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினருக்குப் பயிற்சி யளித்தலும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தமுறை யிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாக் காரியங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டும், பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத் துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப் பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் ;

(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ;

(ஈ) சபையின் கூட்டத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நிறைவேற்றுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் சபையினதும் உறுப்பினராக விருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை மற்றும் அதன் நோக்கங்களை எய்துதல் மற்றும் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றாற்போன்று அதே போன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம். மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**8**. சபையானது உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அவசியமான விவரங்களை எழுதி பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

*உறுப்பினர்களின் பதிவேடு.*

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

(2) கூட்டுத்தாபனத்திற்காகவும் அதன் தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணங்களும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படக்கூடிய வாறான எல்லாப் பணங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**10**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அத்துடன் அதன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான தனி ஆள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையதான கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

ஆண்டறிக்கை.

**11.** (1) சபையானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், சமூக சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் பதிவாளருக்கும் அத்தகைய அறிக்கையுடன் தொடர்புடைய ஆண்டின் அடுத்துறுகின்ற ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்குகளின் கணக்காய்வு அறிக்கையுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்களுடன் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**12**. இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**13**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களினதும் ஆதனத்தினதும் பிரயோகம்.*

**14**. கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டவையாக இருப்பினுஞ்சரி, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவற்றின் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்றவாறு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15**. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது அத்தகைய சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான சபையின் பதவி தாங்குநரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.

**16.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்ட தன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப் பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களி டையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத் தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் மற்றும் அதன் விதிகளினால் ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலி ருந்து தடைசெய்யப்பட்டதுமான வேறேதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக தோதான நிறுவன மானது சமுகமாயுள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் பொதுக் கூட்டமொன்றில் கலைப்பதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்